# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6756/SCIC/2023**

திரு செ. பாக்யராஜ் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
விழுப்புரம். ... பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 05.05.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் கோரிக்கைகளுக்குரிய தகவல்களை 05.05.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தற்போது விசாரணைக்கு எடுத்துவந்துள்ளதாகத் தெரிவித்தார். அத்தகவல்கள் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தகவல்களில் இனம் 7க்கு தவறான சுற்றறிக்கையும், இனம் 9க்கு தவறான தகவல்களும் பொதுத்**

**தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரர் தெரிவித்தவாறு இனம் 7 மற்றும் 9க்கு திருத்திய / சரியான தகவல்கள் /ஆவணங்களை மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் வழங்கவேண்டும்.**

- **மனுதாரர் கோரிய இனங்கள் 4,5,6 தொடர்பாக வருவாய்துறையின் பொதுத் தகவல் அலுவலர்களிடம் ஆணையத்தால் விசாரணை மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே இவ்வழக்கானது பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. ஆணையத்தின் அடுத்த விசாரணைக்கு மனுதாரர், மாவட்ட பதிவாளர், விழுப்புரம் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், விழுப்புரம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கண்டாச்சிபுரம் ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து விசாரணை அழைப்பாணைகள் அனுப்பப்படவேண்டும்.**
- **ஆணையத்தின் அடுத்த விசாரணைக்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியர், விழுப்புரம் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கண்டாச்சிபுரம் ஆகியோர் மனுதாரர் மனுவில் கோரிய இனங்கள் 4,5,6 ஆகியவற்றிற்கான அனைத்து ஆவணங்களுடன் ஆணையத்தில் நேரில் ஆஜராக வேண்டும்.**

2. அதனடிப்படையில் இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி V. புவனேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், விழுப்புரம், திரு R. வெங்கடபதி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம் மற்றும் திருமதி R. கீதா, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம், விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் நேரில் ஆஜரானார்கள்.

3. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான சரியான சுற்றறிக்கையின் நகலினையும், இனம் 7 மற்றும் 9க்கான திருத்திய / சரியான தகவல்கள் /ஆவணங்களை தான் இன்றைய விசாணையின்போது மனுதாரருக்கு வழங்குவதற்காக எடுத்துவந்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், விழுப்புரம் இனங்கள் 4,5,6 ஆகியவற்றிற்கான இனவாரியான

தகவல்கள் அடங்கிய கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேற்படி தகவல்கள் பொதுத் தகவல் அலுவலர்களால் விசாரணையின்போது மனுதாரருக்கு வழங்கப்பட்டது. அதில் விழுப்புரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட தகவல்களில் இனம் 6க்கான தகவல்கள் பதிவுத்துறை தொடர்பானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, **பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர், விழுப்புரம் இனம் 6க்கான சரியான தகவல்களை ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது**.

4. மேலும் இனம் 5ல் மனுதாரர் கோரிய உட்பிரிவிற்கான கட்டணத்தைத் திருப்பி அளிக்கக்கோருவது குறித்து, விழுப்புரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பதிலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலக நில அளவை 2(2) பிரிவு அரசாணை (நிலை) எண்.370 நாள் 21.07.2020ன்படி உட்பிரிவு இனங்களுக்கு கட்டணங்கள் கிராம புறங்களில் ரூ.400/-, நகராட்சியில் ரூ.500/- மாநகராட்சிகளில் ரூ.600/- தொகைகள் நிலஅளவை மற்றும் நிலவரி ஏற்பாட்டு பணிகள் கணக்கு தலைமைப்பு 0029-00-800AA-21499ன் கீழ் வசூலிக்கப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்காணும் கட்டணங்கள் திரும்ப பெறுதல் குறித்து எவ்வித வழிமுறையும் மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்படவில்லையென்று தெரிவித்துள்ளதாகவும், ஆனால் தனது மற்றொரு மனுவிற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட பதிவாளர் திருமதி ரூபியா பேகம் என்பவரால் 09.11.2024 தேதியிட்டு தனக்கு வழங்கப்பட்ட பதிலில் அரசாணை எண்.84 Revenue and Disaster Management Survey and Settlement Wings (SS-II(2)) Section நாள் 04.02.2020 என்பதற்கான நகலினை இணைத்து அதில் ஆவணத்தில் உபயோகப்படுத்தப்பட்ட உட்பிரிவுக் கட்டணம் தவறான தலைப்பின் கீழோ அல்லது ஆவணத்தில் உபயோகப்படுத்தபடாத இனங்களுக்கு மட்டுமே திருப்புத்தொகை வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார் என்று விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார்.

5. கள்ளக்குறிச்சி மாவட்டப்பதிவாளர் திருமதி ரூபியா பேகம் அவர்கள் வேறொரு வழக்கின் விசாரணைக்காக இன்று ஆணையத்திற்கு ஆஜராகியிருந்த நிலையில், அவரிடம் மேற்குறிப்பிட்ட நிகழ்வு குறித்து ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலும் 09.11.2024 தேதியிட்டு மனுதாரருக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட பதிவாளரால் வழங்கப்பட்ட இனங்கள் 3,4,5 ஆகியவற்றிற்கான தகவல்கள் மற்றும் அரசாணை ஆகியவை மேற்படி அலுவலரால் விசாரணையின்போது ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், உட்பிரிவிற்கான கட்டணத்தைத் திருப்பி அளிப்பது குறித்து அரசாணையில் விவரம் ஏதும் குறிப்பிடப்படவில்லையென்று அவர் தெரிவித்தார். அரசாணை எண்.84 நாள் 04.02.2020 என்பதற்கான நகல் ஆணையத்தாலும் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்படி உட்பிரிவிற்கான கட்டணத்தைத் திருப்பி அளிப்பது குறித்து எந்த விவரமும் அதில் இடம்பெறவில்லையென்பதை ஆணையம் பதிவு செய்கிறது. **எனவே, மனுதாரருக்கு 09.11.2024 தேதியிட்டு இனங்கள் 3,4,5 ஆகியவற்றிற்கு தவறான தகவல்கள்**

**வழங்கிய காரணத்திற்காக திருமதி ரூபியாக பேகம், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர், கள்ளக்குறிச்சி என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15 தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

6. **மேலும் மனுதாரரின் மனுவில் கோரிய இனம் 6க்கான தகவல்கள் பதிவுத்துறை சம்மந்தப்பட்ட என்பதால், அத்தகவலை ஒரு வார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர், விழுப்புரம் அவர்கள் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.** மற்ற இனங்களாகிய 4, 7 & 9 ஆகியவற்றிற்கு பொதுத் தகவல் அலுவலர்களால் வழங்கப்பட்ட தகவல்களை ஆணையம் ஏற்கிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6756/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
விழுப்புரம்.

திருமதி ரூபியா பேகம்,
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கண்டாச்சிபுரம்,
விழுப்புரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
விழுப்புரம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு செ. பாக்யராஜ்,
த/பெ செந்தாமரை,
மாரியம்மன் கோவில் தெரு,
கரடிசித்தூர் கிராமம் & அஞ்சல்,
சின்னசேலம் வட்டம் 606 207

**நகல்**
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

Copy to: File TK/PS